Jesus Film Project®
A Cru Ministry

# கவனித்துப்பாருங்கள்
# இயேசுவை



10-ற்கான வாரத்தின் உபாயம்
சிறு சமூக குழுக்களுக்கான

# இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்

## 10-ற்கான வாரத்தின் உபாயம் சிறு சமூக குழுக்களுக்கான

*திரைபடங்களை பயன்படுத்துதல் மகதலேனா: அவமானத்தில் இருந்து விடுவிக்கப்படுதல், இயேசு யார் என்பதையும், அவரைப் பின்பற்றுவது என்றால் என்ன என்பதையும் மக்கள் நன்கு புரிந்துகொள்ள உதவுதல்.*

Jesus Film Project®
A Cru Ministry

## தலைவருக்கான கையேடு

# உங்கள் சமூகத்தின் மத்தியில் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப அவர் உங்களை அர்த்தமுள்ள வழிகளில் பயன்படுத்துவார்.

இயேசு யார் என்பதை நீங்கள் முதன்முதலில் கற்றுக்கொள்ளும்போது, அவருடைய இரக்கம், அவருடைய மென்மை, அவருடைய பரிசுத்தம், அவருடைய சாந்தம், அவருடைய ராஜ்யம் போன்றவற்றை நினைவில் வைத்துக் கொள்ள ஒரு கணம் எடுங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தும் மற்றும் உங்களை இரட்சித்து மீட்கக்கூடிய அனைத்தும் அவரே ஆவார். அவரே உங்கள் நம்பிக்கையாளர் ஆவார், அவரே அனைத்து நாடுகளுக்கும் அனைத்து மக்களுக்குமான நம்பிக்கை ஆவார்.

அப்போஸ்தலராகிய யோவான் வெளிப்படுத்துதல் புத்தகத்தில் எழுதுகிறார்:

"இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்." (வெளிப்படுத்தின விசேஷம் 7:9–10)

நீங்கள் ராஜாக்களின் ராஜா யார் என்பது பற்றிய வல்லமைவாய்ந்த ஞானத்தை பெற்றிருக்கிறீர்கள், மேலும் அவரை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், தேவனுடைய குடும்பத்தில் ஒன்றாக வளரவும் நாங்கள் உங்களை தயார்படுத்த விரும்புகிறோம்.

மத்தேயு நற்செய்தியின் கடைசி வசனங்களில் இயேசு கூறினார்:

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்." (மத்தேயு 28:19–20)

அவர் நம்மை புறப்பட்டுப்போய், *சீஷர்களை* உருவாக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், அவர்களுக்கு உபதேசிக்கவும் கூறினார். அவர் எப்போதும் நம்முடன் இருப்பார் என்றும், ஒவ்வொரு பள்ளத்தாக்கு மற்றும் மலை உயரத்தின் வழியாகவும் நம்முடன் இருப்பார் என்றும் கூறுகிறார். *இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்* அவர் ஒரு சிறந்த உபாயத்தை உதவுவதற்காக வழங்குகிறார். இதைப் பயன்படுத்தி, இயேசு யார் என்பதை இன்னும் ஆழமாக கற்றுகொள்வதன் மூலம், தங்கள் வாழ்க்கையை ஒன்றாகப் பகிர்ந்துகொள்ளும் அர்ப்பணிப்புள்ள *சீஷர்களை* வடிவமைக்க நீங்கள் உதவலாம்.

*இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்* படத்திலிருந்து பகுதிகளைப் பயன்படுத்துகிறது *மகதலேனா மரியாள்: அவமானத்தில் இருந்து விடுவிக்கப்படுதல்* இது இயேசுவின் வேதாகம கதையை மகதலேனா மரியாள் கண்ணோட்டத்தின் வழியாக, அவளுடைய சாட்சியத்தின் மூலம் சித்தரிக்கிறது. குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் கூட சிறிய குழு அமைப்பில் பயன்படுத்த இது ஒரு சிறந்த கருவியாகும். ஒவ்வொரு திரைப்படப் பகுதியையும் பங்கேற்பாளர்கள் பார்க்கும்போது, இயேசுவின் வாழ்க்கை, அற்புதங்கள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி மேலும் கற்று கொள்ள முடியும். இயேசு யாராய் இருக்கிறாரே அதற்காக பலர் அவரைப் பின்பற்ற நிர்பந்திக்கப்படுவார்கள், மற்றும் மற்றவர்கள் அவரைப் பற்றி அறிந்துகொள்ள அதிக வாய்ப்புகளை வேண்டுவார்கள். தொடரின் முடிவில், *இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்* பின்வருவன இரண்டில் ஒன்றைப் பயன்படுத்தி மேலும் சிறிய குழு கலந்துரையாடல்களுக்கான அழைப்பை வழங்குகிறது *ரிவ்கா* அல்லது *இயேசுவை அறிதல்* இயேசு திரைப்படத் திட்டத்தால் உருவாக்கப்பட்ட கருவிகள்®.

இதை பயன்படுத்த நான்கு எளிய வழி முறைகள் உள்ளன *இயேசுவை கவனித்துப்பாருங்கள்.*

# முதலாம் வழிமுறை 01

## நீங்கள் யாரை சந்திக்க விரும்புகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்கவும்

இயேசுவைப் பற்றி யார் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறார்கள்? அவரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய கிராமம் அல்லது சுற்றுப்புறத்தார் அருகில் உள்ளார்களா? நண்பர்கள் அல்லது சக பணியாளர்களின் குழுவா?

முதலிலாவது, அந்த இடத்தில் "சமாதான பாத்திரனை" அடையாளம் காணவும். லூக்கா 10:6ல், இயேசு தம்மைப் பின்பற்றியவர்களில் 72 பேரை தம்முடைய செய்தியை எடுத்துச் செல்ல அனுப்புகிறார், அவர்கள் சந்திக்க சென்ற ஒவ்வொரு இடத்திலும் சமாதான பாத்திரனைத் தேடும்படி அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

அந்த சமாதான பாத்திரன், ஒரு விசுவாசியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை, அவர்:

- கிறிஸ்துவுக்கும் அவருடைய போதனைகளுக்கும் திறந்த மனமுள்ளவராக வேண்டும்
- சமூகத்தில் செல்வாக்குமிக்கவராகவும் அல்லது நன்கு அறியப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.
- நீங்கள் தேர்ந்தெடுத்த சமூகத்தில் உள்ள அவர்களின் தொடர்பிலுள்ள நபர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்த தயாராகவும் வாஞ்சையுள்ளவராகவும் இருக்க வேண்டும்.
- படத்தைப் பார்க்க வருமாறு மற்றவர்களை அழைக்கப்பதற்கு உங்களுக்கு உதவ விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும் மகதலேனா

இந்த நபருடன் நீங்கள் ஒரு உறவை உருவாக்க பரிந்துரைக்கிறோம். உங்கள் சமாதான பாத்திரனுடன் உங்கள் உறவை வளர்க்க உதவும் வழிகாட்டும் கருவியாக இந்த மூன்று - வழிமுறையை நீங்கள் பயன்படுத்தலாம்.

### அ. ஜெபம்

இந்த சமாதான பாத்திரனுக்காக ஜெபியுங்கள். அந்த நபர் யார் என்பதை தேவன் உங்களுக்குக் காட்ட வேண்டும் என்று ஜெபியுங்கள் - அவர் உங்களை அவர்களின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தும் ஒருவர் ஆவார்.
அந்த நபரை நீங்கள் தெரிந்துகொள்ளும்போது, அவர்களுக்காக நீங்கள் எப்படி ஜெபிக்கலாம் என்று கேளுங்கள்.

### ஆ. கவனித்துப்பாருங்கள்

இந்தப் புதிய நண்பருக்காக நீங்கள் ஜெபித்து,அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கும் போது, அந்தத் தேவைகளைக் கேட்டு, அவற்றைச் சந்திப்பதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு அக்கறை காட்டுகிறீர்கள் என்பதைக் காட்டுங்கள். உண்மையான மற்றும் ஆதரவான நண்பராக இருங்கள்.

### இ. பகிர்தல்

நாம் மக்களுக்குச் செவிசாய்த்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது, இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளும் பாக்கியம் நமக்குக் தரப்படுகிறது. சந்தர்ப்பம் வரும்போது, இயேசுவைப் பற்றிய நற்செய்தியையும் அவருடைய மன்னிப்பையும் உங்கள் சமாதான பாத்திரனுக்கு ஏற்கனவே தெரியாவிட்டால் அவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# வழிமுறை இரண்டு

# 02

## காட்டுங்கள் *மகதலேனா: அவமானத்தில் இருந்து விடுவிக்கப்படுதல்*

இந்த உத்தியை கையாள, நாங்கள் ஒரு பெண்கள் குழுவை எங்கள் உதாரணமாக பயன்படுத்துவோம், எவ்வாறாயினும், ஆண்கள் மற்றும் குடும்பங்கள் பின்வருவற்றை பயன்படுத்த வரவேற்கப்படுகிறதோடு மற்றும் ஊக்குவிக்கப்படுகின்றனர் *இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்!*

உங்கள் சமாதான பாத்திரனுடன் சேர்ந்து படத்தை பார்க்க சில பெண்களை அழைக்கவும் *மகதலேனா*, சமாதான பாத்திரரின் வீட்டில் வைத்து படத்தை பார்க்கலாம். உணவைப் பகிர்ந்து, பிறகு திரைப்படத்தைப் பார்க்கவும் அல்லது சிற்றுண்டிகள் மற்றும் குடிக்க ஏதாவது வழங்கவும். தாராளமாக விருந்தோம்பலில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நபரையும் நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.

*மகதலேனா*– திரைப்படத்தை இலவசமாக இயேசு திரைப்படத் திட்ட இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் இயேசு திரைப்படத் செயலி 200க்கும் மேற்பட்ட மொழிகளில் பெறாலாம். யூ.எஸ்.பி போர்ட் கொண்ட தொலைக்காட்சிக்கான அணுகல் உங்களிடம் இருந்தால், பார்ப்பதற்கு ஃபிளாஷ் டிரைவைப் பயன்படுத்தவும் *மகதலேனா.* உங்களிடம் ப்ளூடூத் ஸ்பீக்கருடன் டேப்லெட் சாதனம் இருந்தால், 10 பேர் கொண்ட சிறிய குழுவிற்கு அல்லது பெரிய சூழலில் இன்னும் அதிகமான நபர்களுக்கு படத்தைக் காட்டலாம்.

படத்தின் முடிவில், உங்கள் பார்வையாளர்களுக்கு இரண்டு முக்கிய அழைப்புகளைக் கொடுக்கவும்:

முதலில், இயேசுவைப் பின்பற்றுவதற்காக மாற பெண்களை அழைக்கவும். உங்கள் சொந்தக் கதையைப் பகிர்வதையும், படத்தில் அவர்கள் பார்த்த கதைகளுடன் அதை தொடர்புபடுத்துவதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, இயேசுவைப் பற்றி இன்னும் அதிகம் பேச மறுநாள் வருமாறு அவர்களை அழைக்கவும்! ஆர்வமுள்ள நண்பர்களை அழைத்து வர அவர்களை சவாலுக்குட்படுத்துங்கள். பின்வரும் வழியில் நீங்கள் அவர்களிடம் இருக்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கலாம் மற்றும் கிறிஸ்துவின் கதைகளைப் படிக்கத் தொடங்கலாம் *இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்* பாடத்திட்டம்.

அதன்பிறகு, கலந்துகொண்ட பெண்களைப் பற்றி தெரிந்துகொள்ள நேரத்தை செலவிடுங்கள். படத்தில் அவர்கள் பார்த்த கதைகள் மற்றும் கருப்பொருள்கள் அவர்களின் சொந்த சம்பவங்களோடு மேலோலட்டமாக தொடர்புடையதாக இருக்கலாம். அது வேதனைக்குரியதாகவும் இருக்கலாம். தேவைப்பட்டால் அவர்களுக்காக தனித்தனியாக ஜெபம் செய்யவும்.

இப்போது சிறந்த பகுதி வருகிறது!

# வழிமுறை மூன்று

# 03

## உங்களுக்கான புதியதை தொடங்குங்கள் *இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்* சமூக சிறு குழுக்கள்

இயேசுவின் மேல் விருப்பம் கொண்ட ஒவ்வொரு பெண்ணிற்காகவும் ஜெபியுங்கள், மேலும் அந்த சிறு குழுவினருடைய இருதயம் பரிசுத்த ஆவியானவரால் செம்மைபடுத்தப்பட வேண்டுமென்று ஜெபியுங்கள்.இயேசுவை பற்றின ஒவ்வொரு கதையும் அவர்களுடைய வாழ்கையில் முக்கியமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் தாக்கத்தை உண்டுபண்ணவேண்டும் என்றும் தனிப்பட்ட விதத்தில் அந்த கதைகளுடன் தங்களை தெடர்புபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக வும் ஜெபியுங்கள்.

இயேசுவைப் பற்றி மேலும் அறியவும் அவரைப் பற்றி கலந்துரையாடவும் இந்தச் சந்திப்பிலும் அதைத் தொடர்ந்து வரும் சந்திப்புகளிலும், *மகதலேனா* படத்தின் 10 பகுதிகளைப் பயன்படுத்துவீர்கள்  ஒவ்வொரு பகுதிக்கும் பொதுவான கருப்பொருள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1. ஒவ்வொரு பெண்ணும் கண்டதும் அறிந்ததுமானவைகள்
2. இயேசு: ஒரு தீர்க்கதரிசியை விடமேலானவர்
3. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை
4. இயேசுவின் இரக்கம்
5. மோதலும் தவறான எண்ணமும்
6. குணப்பட்டு மீண்டுவறுதல்
7. அவமானமும் நல்மதிப்பும்
8. இயேசுவையும் அவருடைய மன்னிப்பையும் அறிந்துகொள்ளுதல்
9. இயேசுவை ஏற்றுக்கொண்டு மற்றவர்களுடன் அவரைப்பற்றி பகிர்ந்து கொள்ள வாஞ்சையுடையவர்களாய் இருத்தல்
10. இயேசுவோடு வாழ்தல்

வரவிருக்கும் வாரங்களில், உங்கள் புதிய குழுவானது இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவரைப் பின்பற்றுவது என்றால் என்ன என்பதைப் பற்றியும் அவர்கள் புரிந்துகொள்வார்கள். ஒரு கிறிஸ்தவனாக எப்படி வாழவேண்டும் என்பதை பற்றியும் அவர்கள் அறிந்துகொள்ள அவர்களுக்கு வாய்பு உண்டாகும்.

நாம் ஒவ்வொரு சந்திப்பிற்கும் வலுவான நட்பை வளர்ப்பதற்கு மூன்றில்-மூன்று (3/3) என அழைக்கப்படும் வடிவமைப்பைப் பயன்படுத்துகிறோம். 3∴3 வடிவமைப்பு என்பது கூடுகைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும், அந்த கூட்டங்களின் உள்நோக்கம், ஊக்கம் மற்றும் வளர்ச்சியை உறுதி செய்கிறதற்குமான ஒரு பொதுவான நடைமுறைக் குழு அமைப்பாகும். இது: பின் நோக்கிப் பார்த்தல், மேல் நோக்கிப் பார்த்தல் மற்றும் முன்நோக்கிப் பார்த்தல் என்ற.மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது:

குறிப்பு: *இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்* என்பது தேவனுடைய அழைப்பை நிறைவேற்ற உதவும் மாதிரியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. **தயவு செய்து உங்கள் கலாச்சார தேவைகளுக்கு ஏற்றவாறு இதை மாற்றிக்கொள்ளுங்கள்**!

# மூன்றில் மூன்று

ஓர் சீஷத்துவ பயிற்சிக்கான செயல்முறை

## பின்நோக்கி பார்த்தல்

- **கவனித்துப்பாருங்கள்ல்:** நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள். வாழ்க்கைக் கதைகளையும் பின்னணிகளையும் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- **துதியுங்கள்:** பாடலினாலும் ஜெபத்தினாலும் சேர்ந்து துதியுங்கள்.
- **விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:** நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பகிருங்கள்.
- **தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்:** உங்கள் வாழ்க்கையை இயேசு எப்படி மாற்றினார் என்பதை பகிர்ந்து கொள்ளுங்கள். ஒருவரையொருவர் ஊக்கப்படுத்துங்கள்.

## மேல் நோக்கிப் பார்த்தல்

- **காட்டுங்கள்:** பகுதிகளை இரண்டு முறை பார்க்கவும். இயேசுவைப் பற்றி ஒரு புதிய கதையை ஒன்றாகச் சேர்ந்துக் கற்றுக்கொள்ளுங்கள்.
- **சொல்லுங்கள்:** இந்த பகுதியின் கதையை அவர்களமு சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி யாரையாவது கேளுங்கள்.
- **பூர்த்தி செய்யுங்கள்:** கதையில் உள்ள இடைவெளிகளை நிரப்ப மற்றவர்களை அழைக்கவும்.
- **கலந்துரையாடுங்கள்:** சமயம் வாய்கும் போதெல்லாம் கலந்துரையாடலுக்கான கேள்விகளை கலந்துரையாடுங்கள். நேரம் அனுமதிக்கும் விடத்தில் பல கலந்துரையாடல் கேள்விகளை பற்றி கலந்துரையாடவும்.

## முன்நோக்கி பார்த்தல்

- **பிரயோகியுங்கள்:** நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதைத் தீர்மானிக்கவும்.
- **பயிற்சி செய்யுங்கள்:** ஒருவருக்கொருவர் கதையை பகிர்ந்துகொள்ளுங்கள்.
- **பகிருங்கள்:** கதையை யாரிடம் கூறுவீர்கள் என்று கலந்துரையாடுங்கள்.
- **ஜெபியுங்கள்:** நாம் கற்றுக்கொண்டதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் ஒருவருக்கொருவருக்காகவும் சமுதாயத்தில் உள்ள மற்றவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

# வழிமுறை நான்கு 04

## அடுத்த கட்டத்தை தொடங்குங்கள்

கடைசி பாடமாகிய *இயேசுவை கவனித்துப்பாருங்கள்* என்ற பாடம் கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வாழ்வது என்பதை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பகுதியில், இயேசுவைப் பின்பற்றுவதற்கான உயர்ந்த அழைப்பை பற்றியும் அதற்கான விலைகிரயத்தைப் பற்றியும் மரியாள் மறுபடியும் நினைவுபடுத்துகிறாள். உங்கள் குழுவில் உள்ள நபர்கள் தயாராக இருந்தால் அவர்களின் அடுத்த கட்டத்தை நோக்கி அவர்களை வழிநடத்துவது முக்கியமாகும். **உங்கள் குழு உறுப்பினர்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் தங்களுக்கென்று தனியாக ஒரு *இயேசுவை கவனித்துப்பாருங்கள்* குழுவைத் தொடங்குவதற்கும் அவர்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கலாம்**. உங்கள் குழு தொடர்ந்து ஒன்றாகச் சந்திக்க விரும்பினால், அந்த குழு கலந்துரையாடலுக்கான புதிதாகக் கலந்துரையாட *ரிவ்கா* அல்லது *இயேசுவை கவனியுங்கள்* என்ற தலைப்புகளை பரிந்துரைக்கிறோம் இந்த இரண்டு பாடங்கள் பற்றிய கூடுதல் தகவல்களை கீழே காணலாம்:

*ரிவ்கா* தகவல் பக்கம்:
www.jesusfilm.org/partners/resources/strategies/women/gather-and-grow/

*இயேசுவை அறிந்துகொள்ளுதல்* தகவல் பக்கம்:
www.jesusfilm.org/partners/resources/strategies/knowing-jesus/

இயேசுவை அறிந்துகொள்ளுதல் விளம்பர காணொளி:
www.youtube.com/watch?v=MkYpNK5OvKk

# தலைவருக்கான விரைவான குறிப்பு கையேடு

## பாடத்தின் பகுதிகளுக்கூடாக எவ்வாறு செல்வது

மரியாளின் வாழ்க்கையின் தருணங்களை நன்றாக கற்றுக்கொள்வதற்கு *மகதலேனா* என்ற இந்த படம் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது, அதில் அவள் மனிதனுடைய அழிவை இயேசு வல்லமையுடன் மேற்கொள்வதைப் பற்றி சொல்கிறாள். கொடுக்கப்பட்டுள்ள அமைப்பில் ஒவ்வொரு பகுதியாக கடந்து செல்வதே உங்கள் ஆய்வை நடத்துவதற்கான சிறந்த வழியாகும்.

ஒவ்வொரு வாரமும் அனைத்து கேள்விகளுக்கூடாகவும் செல்ல வேண்டிய அவசியமில்லை. இயேசுவை பற்றியும் மரியாளின் மாற்றம் பற்றியும் இந்த பகுதிகள் என்ன வெளிப்படுத்துகின்றன என்பதை உங்கள் *குழு* உறுப்பினர்கள் சுதந்திரமாக கலந்துரையாட அனுமதிப்பதே இதில் முக்கியமாகக் கருதப்படவேண்டும். உங்கள் குழுவிற்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதும் ஒரு வழிநடத்துபவராக உங்கள் பொறுப்பு ஆகும். இதைச் செய்வதற்கு நீங்கள் கவனிக்கிறவராகவும் வழிநடத்துகிறவராகவும் இருக்க வேண்டு; இது குழு கலந்துரையாடலுக்கான நேரம், எனவே பிரசங்கம் பண்ணுவது உங்கள் நோக்கமாக மாறிவிடக் கூடாது.

காட்சிகளை அணுக, உங்கள் இயேசு திரைப்படத் திட்ட செயலிக்குச் சென்று கீழே சாய்வெழுத்தில் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவையும் கண்டுகொள்ள அதன் சேர்ச் பாரை பயன்படுத்தவும் அல்லது jesusfilm.org/watch என்ற இணையதளத்தில் கண்டறியவும்.

## படத்தின் தனிப்பட்ட பகுதிகள் இங்கே காணப்படுகின்றன மகதலேனா இந்த பாடத்தில் பயன்படுத்தப்பட்டவை:

**பாடம் 1:** ஒவ்வொரு பெண்ணும் கண்டதும் அறிந்ததும் (பகுதி: *மக்தலேனா மரியாள் ரிவ்காவின் வீட்டிற்கு செல்கிறாள்*).
**பாடம் 2:** இயேசு: ஒரு தீர்க்கதரிசியை விட மேலானவர் (பகுதி: *மரியாளுக்கான அறிவிப்பு*).
**பாடம் 3:** அடிமைத்தனத்திலிருந்து விடுதலை (பகுதி: *மக்தலேனா மரியாள் அசுத்த ஆவிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டாள்*).
**பாடம் 4:** இயேசுவின் இரக்கம் (பகுதி: இயேசு *விதவையின் மகனை உயிரோடு எழுப்பினார்*).
**பாடம் 5:** மோதலும் தவறான எண்ணமும் (பகுதி: *துரவண்டையில் இருந்த ஸ்திரீ*).
**பாடம் 6:** குணப்பட்டு மீண்டுவறுதல் (பகுதி: *இரத்த போக்கினால் பெரும்பாடு பட்ட ஸ்திரீ*).
**பாடம் 7:** அவமானமும் நல்மதிப்பும் (பகுதி: *விபச்சாரத்தில் கண்டுகொள்ளப்பட்டு மண்ணிக்கப்பட்ட ஸ்திரீ*).
**பாடம் 8:** இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் (பகுதி: *மரியாள் இயேசுவின் மரணத்தைப் பற்றியும் உயிர்த்தெழுதலைப் பற்றியும் விவரிக்கும் மரியாள்*).
**பாடம் 9:** இயேசுவையும் அவருடைய மன்னிப்பையும் அறிந்து கொள்ளுதல் (பகுதி: *ரிவ்கா விசுவாசித்தல்*).
**பாடம் 10:** இயேசுவோடு வாழ்தல் (பகுதி: *கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்தல்*).

***தேவடைய ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்காக உங்களைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் அவரை சார்ந்துகொள்வதால், தேவன் உங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபித்துக் கொள்கிறோம்.***

# பாடம் 1 ஒவ்வொரு பெண்ணும் கண்டதும் அறிந்ததும்
## ரிவ்காவின் வீட்டிற்குச் சென்ற மக்தலேனா மரியாள் (சங்கீதம் 139)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

ஒரு வனாந்தரத்தின் மத்தியில், தொலைந்து, தனிமையிலும் வேதனையிலும், இருந்த ஆகார் என்ற பெண்ணை தேவன் சந்தித்தார். வேதாகமம் கூறுகிறது, அப்பொழுது அவள்: "என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்." (ஆதியாகமம் 16:13–14). நம்மை உண்மையாய் கண்கின்றவரும் நம் ஒவ்வொருவரையும் அறிந்தவருமாகிய தேவனை பற்றி இன்று நாம் ஒன்றாய் இனைந்து கற்றுக்கொள்வோமாக.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** குழு விவாதம். குறிப்பு: எல்லா கேள்விகளுக்கும் பதிலளித்து முடிக்க வேண்டிய அவசியமில்லை.

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. தேவன் தன்னை நேசிப்பாரா அல்லது அவளை அறிவாரா என்று ரிவ்கா சந்தேகப்பட்டதாக ஏன் நினைக்கிறீர்கள்?*
*3. இன்று தேவனை அனேகர் பேசுகிறார்கள். தேவன் நம்மை பற்றி உண்மையில் என்ன நினைக்கிறார் என்றும் எப்படி உணர்கிறார் என்றும்*
*நாம் எப்படி அறிந்துகொள்ள முடியும்?*
*4. சங்கீதம் 139:1-18 ஆகிய வசனங்களளை வாசியுங்கள். தேவன் நம்மை பற்றி நன்றாக அறிந்திருக்கிறார் என்பதை தீர்கதிரிசியாகிய தாவீது?*
*இந்த பகுதியின் மூலம் என்ன சொல்கிறான்?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. தேவன் உங்களைப் பற்றிய அனைத்தையும் காண்கிறவராகவும் புரிந்துகொள்கிறவராகவும் இருக்கிறார் என்பதை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?*
*6. தேவன் நம்மைப் பற்றி அனைத்தையும் அறிந்திருக்கிறார், இருப்பினும் அவர் நம்மை நேசிக்கிறவராயும் வழிநடத்த உண்மையுள்ளவராயும் எப்போதும் நம்மோடு இருக்கிறவராயும் இருக்கிறார் என்று தாவீது எழுதியிருக்கிறான்*
*இதை நாம் ஏன் சில சமயங்களில் விசுவாசிக்க தவறுகிறோம் என்று நினைக்கிறீர்கள்?*

### முடிவுரை
உங்கள் சிருஷ்டிகரால் முழுமையாக அறியப்பட்டு முழுமையாக நேசிக்கப்படுவதன் அர்த்தம் என்ன என்பதை தியானியுங்கள். உங்களின் ஒவ்வொரு பகுதியும் பார்க்கப்பட்டு, பூர்த்திசெய்யப்பட்டு, மதிப்பளிக்கப்பட்டால் என்ன செய்வீர்கள்? இயேசு பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து உங்கள் வாழ்க்கையை சீர்படுத்துகிறார். தம்மிடம் வரும் அனைவருக்கும் அவர் நித்திய ஜீவனையும் அவருடைய பிரசனத்தையும் வாக்குப்பண்ணியிருக்கிறார்.நீங்கள் தேவனுடைய சாயலிலும் அவருடைய சொந்த ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் முக்கியமானவர்களாகவும் விலையேரப்பெற்றவர்களாகவுமாகவும் இருக்கிறீர்கள் (ஆதியாகமம் 1:26-27). இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 2 இயேசு: ஒரு தீர்க்கதரிசியை விட மேலானவர்

### மரியாளுக்கான அறிவிப்பு (லூக்கா 1:26-37)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்

- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்

- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:

- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்

- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

இயேசு பிறப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு, ஏசாயா என்னும் தீர்க்கதரிசி இஸ்ரவேலுக்கு ஒரு அடையாளம் கொடுக்கப்படும் என்று தீர்க்கதரிசனம் கூறினார்: ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் (ஏசாயா 7:14). இந்த குமாரனாகிய இயேசு, தன்னை மிகவும் தாழ்த்தினார், அவர் குழந்தையாய் பிறந்து எல்லா ஜீவன்களுக்கும் முன்பாக தம்மை தாழ்த்தினார். அவர் முழுவதுமாக ஒரு மனிதனாக இருந்து, அவர் முழுவதும் தேவனாக மட்டுமல்ல, மனிதனாகவும் இருப்பதை நிரூபித்தார். நம்முடனான உறவை மறுபடியும் செம்மைபடுத்த அவர் மிகுந்த வலிகளையும், நோய், பசி, தாகம், துயரம் மற்றும் காயங்கள் போன்றவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருந்தார். இயேசு பிறந்தபோது, அவர் ஒரு கன்னிகையான: கன்னி மரியாளுக்குப் பிறந்தார்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. தேவதூதரின் செய்தியைக் கேட்ட மரியாள் எப்படி உணர்ந்தாள் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் அப்படிப்பட்ட செய்தியை கேட்டிருந்தால் எப்படி உணர்ந்திருப்பீர்கள்?*
*3. "தேவனால் கூடாதது ஒன்றுமில்லை" என்று தேவதூதன் கூறுகிறார். தற்சமயம் உங்களுக்குக் கூடாத காரியமாக இருப்பது என்ன?*
*4. அந்த பிள்ளை "தேவனுடைய குமாரன்" என்று அழைக்கப்படுவார் என்று தேவதூதன் கூறியதன் அர்த்தம் என்ன?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. இயேசு ஒரு கன்னிகையின் வயிற்றில் பிறந்தார் என்பது முக்கியம் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?*

### முடிவுரை

இயேசுவின் கருத்தரித்தல் மற்றும் பிறப்பில் விசுவாசிக்கமுடியாத தன்மையைப் பற்றி தியானியுங்கள். அவர் தேவனாகவும் மனிதராகவும் இருந்தார். அவர் உலகத்தை சிருஷ்டித்தவராயும் இந்த உலகத்தில் வாழ வந்த மனிதனாகவும் இருக்கிறார். அவர் ஒரு இரட்சகராக நாம் அடையாளம் காணக்கூடிய மற்றும் விசுவாசிக்கக்கூடியவராகவும் இருக்கிறார். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்

- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்

- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்

- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்

- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 3 அடிமைத்தனத்திலிருந்து விடுதலை
## மக்தலேனா மரியாள் அசுத்த ஆவிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டாள்
**(லூக்கா 8:1-2)**

பின்னோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

மனித கடத்தல், அடிமையாதல், தப்பித்தல். இன்று நம் உலகில் பல வகையான அடிமைத்தனங்கள் காணப்படுகின்றன. மனிதகுலம் பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறது என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது, ஆனால் அது விடுதலையை காணலாம் என்றும் கற்பிக்கிறது. இந்தக் கதையில், மரியாள், தீய ஆவிகளினால் அடிமைப்பட்டு, இயேசுவின் அதிகாரத்தையும் வல்லமையையும் எதிர்கொள்வதைப் பாருங்கள்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. மரியாளின் அடிமைத்தனம் அவளை தனிப்பட்ட முறையிலும் சமூகத்திலும் எவ்வாறு பாதித்தது?*
*3. மரியாளுக்கு இயேசுவின் பதில் அவரைப் பற்றி என்ன வெளிப்படுத்துகிறது?*
*4. இயேசுவால் விடுவிக்கப்பட்ட பிறகு மரியாள் எப்படி மாற்றப்பட்டாள்?*

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. இயேசு யார் என்பதை தீய ஆவிகள் அறிந்திருந்து, அவரை "தேவனுடைய பரிசுத்தர்" என்று அழைத்தது ஏன் குறிப்பிடத்தக்கது?*
*6. இயேசு மரியாளை விடுவித்ததைப் பார்த்த பிறகு பார்வையாளர்கள் அவரைப் பற்றி என்ன நினைத்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?*
*7. கதையில் நீங்கள் மரியாள் என்று கற்பனை செய்து பாருங்கள். இயேசுவை நீங்கள் எப்படி உணர்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறீர்கள்?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

### முடிவுரை
கதையில் மரியாள் அனுபவித்த சுதந்திரத்தைப் பற்றி தியானியுங்கள். விடுவிக்கப்பட்ட பிறகு அவள் கண்களில் இருந்த தெளிவு, அவள் வெளிப்படுத்திய நன்றி மற்றும் அவளுடைய முழு வாழ்க்கையின் மாற்றத்தையும் நினைவில் வையுங்கள். பகுதியின் ஆரம்பத்திலிருந்து இதே பெண்தான் வருகிறாள் என்று உங்களால் நம்ப முடிகிறதா? உங்கள் கட்டுக்களிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் இயேசு உங்களை விடுவித்ததன் நிவாரணத்தை கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எப்படி புதியவராக இருக்க விரும்புகிறீர்கள்? உங்கள் தோள்களில் இருந்து நீங்கள் சுமக்கும் சுமையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்தொடர அவரை அனுமதிக்கவும். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்னோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 4 இயேசுவின் இரக்கம்
## விதவையின் மகனை இயேசு எழுப்புகிறார் (லூக்கா 7:11-17)

பின்னோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

துக்கம் என்பது ஆழ்ந்த கவலையாக வரையறுக்கப்படுகிறது, குறிப்பாக ஒருவரின் மரணத்தினால் ஏற்படுகிறது. இந்தக் கதையில் ஒரு விதவை தன் ஒரே மகன் இறந்துவிட்டதால் துக்கப்படுகிறாள். இயேசு அந்தப் பெண்ணிடம் சென்று அவளுடைய இருதயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் மரியாள் பார்க்கிறாள். இந்தச் சமயத்தில், இயேசு அவளுடைய ஒரே மகனைக் குணப்படுத்தி விலையுயர்ந்த பரிசாகிய அவளுடைய மகனை அவளுக்குத் திருப்பிக் கொடுத்தார். இதே போன்ற சம்பவத்தை அவர் எப்பொழுதும் செய்துகொண்டிருக்க மாட்டார், ஆனால் ஒவ்வொரு சூழ்நிலையிலும், குறிப்பாக நாம் வலியுடன் இருக்கும்போது அவருடைய பிரசனத்தை நாம் நிச்சையமாக உணர்ந்துகொள்ளலாம்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்**. கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. விதவையிடம் பேசுவதை இயேசு நிறுத்துகிறார். இது அவருடைய இருதயத்தைப் பற்றி என்ன வெளிப்படுத்துகிறது?*
*3. மரித்தோரை உயிர்த்தெழச் செய்ய வல்ல இயேசுவை பற்றி இந்த காரியம் என்ன விளக்குகிறது?*
*4. நீங்கள் எப்போதாவது நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருந்திருக்கிறீர்களா?*

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. இயேசு சிறுவனை மரித்தோரிலிருந்து எழுப்பியபோது மக்கள் என்ன செய்தார்கள்? விதவை என்ன செய்தாள்?*
*6. இன்றைய பொழுதில் உங்களில் யாராவது எதற்காவது துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களா? அப்படி இருப்பீர்களானால், அந்த துக்கத்தின் மத்தியில் தேவன் உங்களுக்கு உதவுவார் என்று நீங்கள் விசுவாசிக்க விரும்புகிறீர்களா?*

### முடிவுரை
மரித்தவர்களுக்கு சுவாசம் கொடுக்க தேவனால் மட்டுமே முடியும். இயேசுவே தேவன் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் இந்த மனிதனை மட்டுமல்ல, அவருடைய ஊழியப் பாதையில் மூன்று முறை மரித்தவர்களை உயிரோடு எழுப்பி இருக்கிறார். அவர் வல்லமை வாய்ந்தவர் மட்டுமல்ல, அவர் இரக்கமுள்ளவரும், மென்மையானவரும், தேற்றுகிறவருமாக இருக்கிறார். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்னோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 5 மோதலும் தவறான எண்ணமும் துரவண்டையில் இருந்த ஸ்திரீ (லூக்கா 4:1-42)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

நீங்கள் எப்போதாவது யாரோ ஒருவரால் தவறாக எண்ணுவதையோ அல்லது குறைத்து மதிப்பிடப்படுவதையோ உணர்ந்திருக்கிறீர்களா? இந்தக் கதையில், ஒதுக்கப்பட்ட சமாரிய பெண் தனது அனுதின வேலையாக தண்ணீர் கொண்டு செல்ல துரவண்டையில் வருவதை மரியாள் காண்கிறாள். வெயிலில் அவள் தனியாக வந்துகொண்டிருந்தாள். அவள் அந்த இடத்திற்கு வந்தவுடன், ஒரு மனிதனைப் பார்த்து ன் அங்கு நிறாபதை பார்த்து திகைத்துப்போனாள். அவர் ஒரு மனிதன் என்று மட்டுமல்ல, ஒரு யூதர் என்பதை அவள் கண்டுகொண்டாள். சமரியர்கள் யூதர்களும் புறஜாதியர்களும் கலந்த ஜனக்கூட்டமாக இருந்தார்கள்., அவர்களின் மதக் கருத்துக்களும் நம்பிக்கைகளும் ஒன்றாய் இருந்தது.. யூதர்களும் சமாரியர்களும் ஒருவருக்கொருவர் முரண்பாடுள்ளவர்களாயிருந்தார்கள், ஆனால் இரு கூட்டத்தாரும் தங்கள் பாவங்களை மன்னிக வரவிருக்கும் மேசியா அல்லது இரட்சகரை எதிர்நோக்கியிருந்தனர். மனிதனாகிய இயேசு, கலாச்சாரத்தை புறக்கணித்து, அவளை அணுகும்போது அந்தப் பெண்ணின் ஆச்சரியத்தை கற்பனை செய்து பாருங்கள். கதையின் முடிவில், புறக்கணிக்கப்பட்ட சமாரிய பெண், இயேசு தன்னை மேசியா என்று வெளிப்படையாக வெளிப்படுத்தும் முதல் நபராகிறாள்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்**. கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. அந்தப் பெண்ணின் கடந்த காலத்தைப் பற்றி இயேசுவுக்குத் தெரியும் என்பது ஏன் குறிப்பிடத்தக்கதாயிருக்கிறது?*
*3. இயேசு அந்தப் பெண்ணின் சொந்த வாழ்க்கையைப் பற்றியும் அவளுடைய கடந்தகால பாவங்களைப் பற்றியும் கூறியபோது அவள் எப்படி உணர்ந்தாள் என்று நினைக்கிறீர்கள்?*
*4. இயேசு சமாரியப் பெண்ணிடம் பேசுவதை சீஷர்கள் பார்த்தபோது, அவர்களுடைய செயல் எப்படி அவர்களுடைய தவறான எண்ணத்தை வெளிப்படுத்தியது? இது இயேசுவை குறித்து என்ன கூறுகிறது?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. இந்தக் கதையில் இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு என்ன கற்பிக்க முயன்றார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*
*6. தான் வாக்குப்பண்ணப்பட்ட மேசியா என்று இயேசு சொன்னபோது அந்தப் பெண் என்ன செய்தாள்?*

### முடிவுரை
நீங்கள் எடுத்த ஒவ்வொரு மோசமான முடிவும், ஒவ்வொரு சங்கடமான தருணமும் நீங்கள் வெட்கப்பட்ட சூழ்நிலை போன்ற உங்கள் கடந்த காலங்கள் அனைத்தையும் இயேசு அறிந்திருக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன என்பதைக் கவனித்துப்பாருங்கள். அதையெல்லாம் வெளிக்கொண்டு வந்தாலும், அவர் உங்களை இன்னும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் பார்க்கிறார் என்ற உண்மையை இப்போது தியானியுங்கள். உங்களை மட்டுமல்ல, நீங்கள் வெறுக்கக்கூடிய மக்களையும் கூட இது உள்ளடங்கும். எல்லா மக்களும் அவரை அறிய வேண்டும் என்ற அவரது விருப்பத்தை தியானியுங்கள். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

# பாடம் 6 குணப்பட்டு மீண்டுவறுதல்
## இரத்தப் போக்கினால் பெரும்பாடு பட்ட ஸ்திரீ (லூக்கா 8:40-48)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

நீங்கள் எப்போதாவது உடல் அல்லது உணர்ச்சி ரீதியிலான காயத்திலிருந்து விடுபட மிகவும் ஆசைப்பட்டிருக்கிறீர்களா, அதை சரிப்படுத்த நீங்கள் அநேக வழிகளிலும் முயற்சித்தீர்களா? இந்தக் கதையில் வரும் பெண், மற்றவர்கள் யாரும் கவனிக்க மாட்டார்கள் என்று நினைத்து, பல வருடங்கள் எவ்வளவோ சிகிச்சை பெற்றும் பலனின்றி பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கும் அந்த ஸ்திரீ இயேசுவின் அங்கிகளைத் தொட்டாலாவது இறுதியாக குணமடைய முடியும் என்று நம்பினாள். இரத்தப்போக்கினால் அந்த காலத்தில் அவள் மதச்சட்டங்களின்படி தீட்டுள்ளவளாகக் கருதப்பட்டாள்.. அவள் ஒரு பெரிய கூட்டத்தின் நடுவில், மரியாளும் மற்றவர்களும் அருகில் நின்றிருக்கும்போது இயேசுவைத் தொட முயற்சிக்க முடிவு செய்தாள். என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. ஜனக்கூட்டத்திற்கு முன்பாக அந்த பெண் தன்னை அடையாளப்படுத்த வேண்டும் என இயேசு ஏன் எண்ணினார் என்று நினைக்கிறீர்கள்?*
*3. பெண் அறிக்கையிட்டதற்கு இயேசுவின் பதில் ஏன் முக்கியமானது?*
*4. நீங்கள் அந்த கதையில் இருக்கும் பெண் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் குணமான பிறகு முதலில் என்ன செய்வீர்கள், இயேசுவிடம் எப்படி உங்களை வெளிப்படுத்துவீர்கள்?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. மற்ற யாராலும் செய்ய முடியாததை இயேசுவால் செய்ய முடியும் என்பதன் அர்த்தம் என்ன?*
*6. இயேசுவை பார்ப்பதற்கு முன்பு பெண்ணின் வாழ்க்கை எப்படி இருந்தது என்று நினைக்கிறீர்கள்?*

### முடிவுரை
ஒரு பெருங்கூட்டத்தின் நடுவிலே, அந்தப் பெண் கையை நீட்டி, இயேசுவின் அங்கியைத் தொட்டாள். அவள் அந்த அங்கியைத் தொட்டவுடன், அவளுடைய பெரும்பாடாகிய இரத்தபோக்கு நின்றுபோனதை அவள் உணர்ந்தாள். அவள் குணமடைந்தாள்! அவள் எப்படி விடுதலையோடும் நன்றி இருதயத்தோடும் இருந்திருப்பாள் என்று கற்பனை செய்து பாருங்கள். இயேசு சொன்னார், "மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்." என்றார். அவருடைய வார்த்தைகளை தியானியுங்கள். அவள் அறிக்கையிட்டதற்குப்பின் அவர் இந்த வார்த்தையை சொன்னார். அவளை தீட்டுள்ளவள் என்று முத்திரை குத்திய மக்கள் கூட்டத்திற்கு முன்னால், இயேசு அவளை மகளே என்று அழைத்து, அவளுடைய விசுவாசத்தை கனப்படுத்தினார். நாம் உணரும் துன்பங்களையும் காயங்களையும் இயேசு காண்கிறவறாய் இருக்கிறார். நாம் உடைந்து போகிற போதும் வெட்கப்படும் போதும் அவர் நம்மோடு இருக்க விரும்புகிறார். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 7 அவமானமும் நல்மதிப்பும்
## விபச்சாரத்தில் கண்டுகொள்ளப்பட்டு மண்ணிக்கப்பட்ட ஸ்திரீ
(யோவான் 8:1-11)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

இயேசுவின் நாட்களிலிருந்த மதத் தலைவர்கள், "மோசேயின் நியாயப் பிரமானம்" என்று அழைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் கவனம் செலுத்தினர். தேவனோடு உறவாடுவதற்கு மக்கள் நியாயப்பிரமானத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, நியாயப்பிரமானத்தி ல் சொல்லப்பட்டிருக்கிற எல்லாவற்றையும் யாரும் கடைப்பிடிக்க முடியாது, ஏனென்றால் நாம் அனைவரும் பாவம் செய்கிறவர்களாய் இருக்கிறோம். எபிரேய மொழியில் பாவம் என்றால் "தோற்றுப்போவது" அல்லது "இலக்கை தவறவிடுவது" என்று பொருள் ஆகும். நியாயப்பிரமானத்தின் கட்டளைகளின் கீழ், நாம் அனைவரும் குற்றமுள்ளவர்களாகவும் மரணத்திற்குப் பாத்திரராகவும் இருக்கிறோம். ஒரு இரட்சகர் இல்லாமல், நாம் அனைவரும் அழிந்துபோய்கொண்டிருந்தோம்.. ஆனாலும், நம்முடைய பாவத்திற்கான தண்டனையைச் செலுத்துவதற்காக, நம்முடைய இடத்தில் தம்மையே ஒப்புக்கொடுக்க இயேசு உலகத்திற்கு வந்தார். இந்தக் கதையில், பாவவியான ஒரு பெண்ணை இயேசுவிடம் கொண்டுவந்தார்கள். என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. நியாயப்பிரமானத்தின்படி, விபச்சாரத்தில் பிடிபட்ட ஆண் பெண் ஆகிய இருவரும் தண்டிக்கப்பட வேண்டும், ஆனால் அந்த பெண் மட்டுமே இயேசுவிடம் கொண்டு வரப்பட்டாள். ஏன் அந்த பெண்ணை மட்டும் நியாயந்தீர்க்கக் கூட்டிக்கொண்டு வந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?*
*3. இயேசு அவர்களுக்கு சொன்ன பதில் மதத் தலைவர்களுக்கும் அந்த பெண்ணுக்கும் முக்கியமானதாக இருந்தது ஏன்?*
*4. "நானும் உன்னை நியாயம்தீர்ப்பதில்லை" என்று இயேசு சொல்லும்போது அந்தப் பெண் எப்படி உணர்ந்தாள் என்று நினைக்கிறீர்கள்?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. இயேசு ஏன் இப்படி பதிலளித்தார் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் எதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணினார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*
*6. மதத் தலைவர்களின் இடத்தில் நீங்கள் இருந்திருந்தால், இயேசுவின் பதிலுக்கு உங்கள் பதில் என்னவாக இருந்திருக்கும்?*

### முடிவுரை
அந்தப் பெண்ணுக்கும் மதத் தலைவர்களுக்கும் இயேசு பதிலளித்த விதத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அந்த மனிதர்கள் அவளை அவரிடம் கூட்டிவந்தது அவள் மீது கொண்டுள்ள அக்கறையினால் அல்ல, மாறாக அவளை அவமானப்படுத்துவதற்காகவும், இயேசுவை காட்டிக்கொடுப்பதற்காகவும் தான் என அவருக்குத் தெரியும். அவர் அந்தப் பெண்ணின் நடத்தையை கண்டிக்கவோ அல்லது மதத் தலைவர்களுடன் தன்னை இணைத்துக் கொள்ளவோ விரும்பவில்லை. அவர் ஞானமுள்ளவராக அவர்களை கடிந்துகொண்டார். இயேசுவின் இருதயம் எப்படி இரு தரப்பினரையும் மனந்திரும்புவதற்கு வழிநடத்தியது என்பதைக் கவனித்துப் பாருங்கள். இயேசு தேவனாய் இருந்தபடியால் அவரால் பாவங்களை மன்னிக்க முடியும்-அது தேவனால் மட்டுமே செய்யக்கூடிய ஒன்றுதார். நாம் இயேசுவைப் பின்பற்றத் தொடங்கும் போது, அவர் நம்மை மன்னித்து, அவரில் நமக்குப் புதிய வாழ்க்கையை அளிக்கிறார். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

# பாடம் 8 இயேசுவின் மரணமும் மற்றும் உயிர்த்தெழுதலும் மகதலேனா இயேசுவின் மரணத்தை பற்றியும் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றியும் விளக்குகிறாள் (மத்தேயு 27-28)

பின்நோக்கி பார்த்தல்

## கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

## துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

## விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

## தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

இயேசு மரித்த அந்த இரவில், அவருடைய சரீரத்தை சுகர்ந்தமிடுவதற்கு வாசனை திரவியங்களையும் தைலங்களையும் தயாரிக்க பெண்கள் ஒரு வீட்டிற்கு விரைந்தனர். அடுத்த நாள், ஓய்வுநாளைய் இருந்தபடியால் முன்றாம் நாளிலே தங்கள் தேவனுடைய சரீரத்தை காண வேண்டு என்ற ஆவலுடையவர்களாய் அதற்கு திட்டமிட்டுக்கொண்டு ஓய்ந்திருந்தார்கள். அவர்கள் இயேசுவின் பாடுகளை நினைத்து அழுதுகொண்டிருந்தார்கள், மேலும் அவருடைய மரணத்தை பற்றி நினைக்கும் போது அவர்களடைய இருதயம் வேதனையில் நிறைந்தது. அவர்களுடைய நெருங்கிய சிநேகிதனும், அவர்களை பாதுகாத்தவரும், அவர்களுடைய இராஜாவுமானவர் மரித்துவிட்டார்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கதையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. இயேசுவின் மரணம் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டது என்பது ஏன் குறிப்பிடத்தக்கது?*
*3. நமது சாபமாகிய பாவம் மற்றும் மரணத்தைப் பற்றி மரியாள் குறிப்பிடுகிறாள். இயேசுவின் மரணமும் மற்றும் உயிர்த்தெழுதலும் இந்த இரண்டையும் எவ்வாறு வென்றது?*
*4. மரியாள் ரிவ்காவிடம், "நீ ஒரு நேச குமாரத்தி" என கூறினாள். தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் எவ்வாறு காட்டுகின்றன?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. இயேசு அவருடைய மரணத்திற்குப் பிறகு மரியாளுக்கும் சீஷர்களுக்கும் பலமுறை காட்சியளித்தார் என்பது ஏன் குறிப்பிடத்தக்கது?*
*6. சங்கீதம் 22ஐ ஒன்றாகப் வாசியுங்கள். எந்த வசனங்கள் இயேசுவை மேசியாவாக உறுதிப்படுத்துகின்றன?*
*7. இயேசுவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் மூன்று நாட்கள் இருந்தன. இயேசு மரித்தவுடன் அவருடைய சீஷர்கள் அனைவரும் எப்படி உணர்ந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?*

## முடிவுரை
"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." (ஏசாயா 53:5) என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வார்த்தைகளை சிந்தித்துப் பாருங்கள். இயேசு மக்களை நேசித்தார். அவர் நம்மை ஒரு பொக்கிஷமாகக் கருதினார், எனவே அவர் நமக்காக சபிக்கப்பட்டார், தேவ னுடனான இடைவெளியை சகித்துக் கொண்டார், நமக்காக மரித்தார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபோது, அவரே உண்மையான தேவன் என்பதை நிரூபித்தார். இயேசு தம்முடைய மரணத்தின் மூலமாயும் உயிர்த்தெழுதலின் மூலமாயும் காட்டிய இரக்கத்தையும் வல்லமையையும் கவனித்துப்பாருங்கள். இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.

---

முன்நோக்கி பார்த்தல்

## பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

## பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

## பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

## ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 9 இயேசுவையும் அவருடைய மன்னிப்பையும் அறிந்துகொள்ளுதல் ரிவ்காவினுடைய விசுவாசம் (லூக்கா 24:36-50)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

தேவனை பற்றி மரியாள் சொல்லிக்கொண்டிருந்த கதையின் மதிப்பாய்வின்படி நாம் இந்த தொடரின் முடிவிற்கு வந்துவிட்டோம்.அவர் நம் ஒவ்வொருவரையும் கண்டு அறிந்துகொள்கிறார். அவர் நம்இரட்சகராயும், மாம்சத்தில் வந்த தேவனாயும், கட்டுக்கலிலிருந்து நம்மை விடுவித்துக் காக்கும் இரட்சகராயும் இருக்கிறார். மரித்தவர்களை உயிருடன் எழுப்ப வல்லவராயும், மக்களை அவர்களின் மிகுந்த வேதனைகளிலும் துன்பங்களிலும் அவர்களுடன் இருக்கும் இரக்கமுள்ளவராயும் இருக்கிறார். நாம் மிகக் கொடூரர்களாயும் வெட்கப்படும் காரியங்களை செய்கிறவர்களாயும் இருந்தாலும், நம்மை மன்னிக்கவும் மீட்கவும் அவருக்கு எல்லா அதிகாரமுள்ளவராய் இருக்கிறார். அவர் மரிக்கும் போது கூட அவருடைய கடைசி வார்த்தையை நமக்காக விட்டுச்சென்றிருக்கிறார். ரிவ்கா இயேசுவுக்கு பதிலளிப்பதைப் பாருங்கள்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய மரியாளின் மதிப்பாய்வில் நீங்கள் எதை அதிகம் விரும்பினீர்கள்? உங்கள் கவனத்தை ஈர்த்தது எது?*
*2. இயேசுவினுடைய எந்தப் பண்பு உங்களுக்கு மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது?*
*3. நாம் எப்படி நம் பாவங்கள் நீங்கி தேவனோடு இனைகிறோம்?*
*4. ரிவ்காவின் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று அவளுக்கு உறுதியாக தெரியாது. அவளுடைய விசுவாசம் அவளுடைய உணர்வுகளையும் அவளுடைய கிரியைகளையும் சார்ந்து இல்லாமல் தேவனுடைய வார்த்தையிலும் அவருடைய மன்னிப்பிலும் தான் இருந்தது என்பது ஏன் குறிப்பிடத்தக்கது?*
*5. நீங்கள் யாராவது ரிவ்காவை போல ஜெபிக்க விரும்புகிறீர்களா? உங்களில் யாராவது ஜெபம் செய்ய விரும்புகிறீர்களா?*

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*6. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்கள் இரட்சிப்பில் உறுதியாக இருப்பது ஏன் முக்கியமாகும்?*
*7. ரிவ்காவின் தயக்க ம் உங்களுடைய தயக்கத்தைப்போல இருக்கிறதா? அப்படியானால், உங்கள் தயக்கங்கள் அல்லது கவலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.*
*8. இப்போது உங்கள் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைக்க நினைக்கிறீர்களா?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

### முடிவுரை
இந்த பகுதியில், ரிவ்கா இயேசுவைப் பின்பற்ற முடிவு செய்வதைப் பார்க்கிறோம். அவரைப் பின்பற்றும் போது உண்டாகும் மாற்றங்களையும்அது உங்களுடைய வாழ்க்கையில் என்ன அர்த்தத்தை உண்டுபண்ணியிருக்கிறது என்றும் கவனித்துப் பாருங்கள். நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட விரும்புகிறீர்களா? மன்னிக்கப்பட்டு மீட்டுக்கொள்ளப்பட விரும்புகிறீர்களா? அவரால் கண்டுகொள்ளப்பட்டு அறிந்துகொள்ளப்படுகிறீர்களா? யாரையாவது சார்ந்துகொள்ள விரும்புகிறீர்களா? உண்மையான விசுவாசமும் பாவத்தை குறித்த நேர்மையான குற்ற உணர்வையுமே இயேசு நம்மிடம் இருந்து எதிர்பார்க்கிறார். ஒருமுறை நீங்கள் அவரை ஏற்றுக்கொண்டால் என்றென்றும் அவர் உங்கள் விசுவாசத்தை கண்டு உங்களை ஏற்றுக்கொண்டார் என்று நீங்கள் உறுதியுடன் இருக்கலாம்.இப்போது நீங்கள் இயேசுவைக் கவனித்துப்பார்த்திருக்கிறீர்கள், இதுவே நீங்கள் ஒப்புக்கொடுக்கக் கூடிய சரியான நேரமாக இருக்கிறது. நீங்கள் அவரைப் பின்பற்றுவீர்களா?

** தலைவரின் குறிப்பு: இயேசுவைப் பின்பற்ற முடிவு செய்வதற்கு ஒருவருக்கு வாய்ப்பளிப்பது முக்கியம். "ரிவ்காவுடன் யாராவது ஜெபிக்க விரும்புகிறீர்களா ? உங்களில் யாராவது ஜெபிக்க விரும்புவீர்களா?" என குழுவிடம் கேட்க மறக்காதீர்கள். முடிந்தால், குழுவிற்கு வெளியே உள்ள ஒவ்வொரு பெண்களையும் தனித்தனியாக அணுகவும்.*

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

## பாடம் 10 இயேசுவோடு வாழ்தல்
## கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்தல் (மத்தேயு 28:18-20)

பின்நோக்கி பார்த்தல்

### கவனித்துப்பாருங்கள்
- நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- கொடுப்பதற்கு உதாரத்துவமாய் இருங்கள்.

### துதியுங்கள்
- பாடலிலும் ஜெபத்திலும் சேர்ந்து துதியுங்கள்.

### விசுவாசத்தைக் கொண்டாடுங்கள்:
- வெற்றிகளில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள்.

### தரிசனத்தை பகிர்ந்துகொள்ளுங்கள்
- கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதில் உறுதியாய் இருக்க ஒருவரையொருவர் ஊக்குவியுங்கள்.

---

மேல் நோக்கிப் பார்த்தல்

இயேசுவைப் பின்பற்றும்போது மரியாளைப் போல நீங்களும் மாறுவீர்கள். அவருடைய அடையாளத்தின்படி வாழவும், கண்ணியம், நம்பிக்கை மற்றும் நன்மையை எடுத்துச் செல்லவும் – அவர் நம்மை ஒரு பெரிய காரியத்திற்காக அழைக்கிறார். நம் வாழ்க்கையை மாற்றிய ஜீவனுள்ள வார்த்தையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அவர் நம்மை அழைக்கிறார். அவர் நமக்காக இருக்கிறார் என்பதை அறிந்து, அவருடைய வார்த்தையிலும் அவருடைய கட்டளைகளிலும் அவரை விசுவாசிக்கும்படியாக அவர் நம்மை அழைக்கிறார். அவர் நம் ஒவ்வொரு பகுதியையும் அறிந்தும் புரிந்தும் இருக்கிறார் என்பதை அறிந்து, அவரில் பாதுகாப்பாக தங்கியிருக்க அவர் நம்மை அழைக்கிறார்.

**வழிமுறை 1: காட்டுங்கள்.** பகுதியை இரண்டுமுறை பார்க்கவும்.
**வழிமுறை 2: சொல்லுங்கள்.** இந்த பகுதியின் கதையை அவர்களின் சொந்த வார்த்தைகளில் சொல்லும்படி குழுவில் உள்ள உறுப்பினரிடம் கேளுங்கள்.
**வழிமுறை 3: பூர்த்திசெய்யுங்கள்.** கதையில் ஏதேனும் இடைவெளிகள் இருக்குமெனில் அதை நிரப்பவோ அல்லது திருத்தவோ குழுவை அனுமதிக்கவும்.
**வழிமுறை 4: கலந்துரையாடுங்கள்.** கலந்துரையாடலுக்கான கேள்விகள்:

*1. கிறிஸ்தவ வாழ்க்கையின் அழைப்பில் நீங்கள் எதை அதிகம் விரும்பினீர்கள்? உங்கள் கவனத்தை ஈர்த்தது என்ன?*
*2. இயேசுவைப் பின்பற்றுதல் எவ்வாறு இருக்கும்?*
*3. இயேசுவின் கடைசி வார்த்தைகள் உங்களுக்கு எவ்வாறு தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது?*
*4. உங்கள் வாழ்க்கையின் எந்தப் பகுதிகளை இயேசு மாற்றவேண்டும் என விரும்புகிறீர்கள்?*

**ஆழமாக உரையாடுங்கள் (நேரம் அனுமதித்தால் மேலும் கலந்துரையாடுங்கள்)...**
*5. உங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கு இயேசுவை அனுமதிப்பதில் உங்களை மிகவும் அச்சுறுத்துவது எது?*
*6. இயேசுவின் வார்த்தைகள் எப்படி உங்களுக்கு சவாலாக இருக்கிறது?*

உங்கள் மொழியில் இந்த பகுதியை உங்கள் ஸ்மார்ட் சாதனத்தில் பார்க்க இந்த QR குறியீட்டை பயன்படுத்துங்கள்

### முடிவுரை
இயேசு தம் சீஷர்களுக்குக் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளின் மூன்று முக்கிய அம்சங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். வானத்திலும் பூமியிலும் தனக்கு எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டதாக இயேசு அறிவிக்கிறார். நாம் வெளியே போய் அனைவரையும் சீஷராக்கி அவர் கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்படியும்படி நாம் அவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும் என்று நமக்குக் கட்டளையிடுகிறார். மேலும், அவர் இறுதி வரையிலும் நம்முடன் இருப்பதாக நமக்கு உறுதியளிக்கிறார். இயேசுவின் கடைசி அறிக்கையையும், கட்டளையையும், வாக்குறுதியையும் உங்கள் வாழ்க்கையில் எப்படி பிரதிபலிக்கப் போகிறீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.. இயேசுவை கவனித்துப்பாருங்கள்.

நீங்கள் இயேசுவைப் பின்தொடரத் தயாராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவரைப் பற்றியும், அவரை எவ்வாறு பின்பற்றலாம் என்றும் தொடர்ந்து கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? உங்கள் ஆவிக்குரிய பயணத்தில் நீங்கள் தொடர்ந்து கற் றுக்கொள்ளவும் வளரவும் அதிக வாய்ப்புகள் காணப்படுகிறது. இத்துடன் *இயேசுவை கவனித்துப்பாருங்கள்* என்ற பகுதி முடிந்தாலும், நீங்கள் அடுத்து எடுக்கக்கூடிய பல முயற்சிகள் இருக்கின்றது. உங்கள் ஒவ்வொருவருக்கும் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்பதை ஒன்றாக கலந்துரையாடுங்கள்.*ரிவ்கா* மற்றும் *இயேசுவை அறியுங்கள்* போன்றவை இயேசு திரைப்படத் திட்டம் பரிந்துரைக்கும்அடுத்த வழிமுறைகளாக இருக்கிறது. இந்த கருவிகள் பற்றிய கூடுதல் தகவல்கள் தலைவருக்கான கையேட்டின் நான்கு வழிமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. **நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும், உங்கள் சொந்த *இயேசுவை கவனித்துப்பாருங்கள்* குழுவைத் தொடங்கவும் நீங்கள் விரும்பலாம். இது உங்களுக்கு சரியான அடுத்த வழிமுறையாக இருந்தால், உங்கள் குழுத் தலைவரிடம் ஆலோசனையையும் ஆதரவையும் கேளுங்கள்.**

---

முன்நோக்கி பார்த்தல்

### பிரயோகியுங்கள்
- தேவன் தம்மை எவ்வாறு விசுவாசமுள்ளவராக காட்டுகிறார்?
- தேவனை பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எவ்வாறு கடைப்பிடிப்பீர்கள்?

### பயிற்சி செய்யுங்கள்
- ஒருவருக்கொருவர் கதை சொல்ல பயிற்சி செய்யுங்கள்.

### பகிருங்கள்
- இந்தக் கதையை யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

### ஜெபியுங்கள்
- நீங்கள் கற்றுக்கொண்டதற்கு தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- ஒருவருக்கொருவர் ஜெபம் செய்யுங்கள்.
- சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

# இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்

யு 10-சமூக சிறு குழுக்களுக்கான வாராந்த உபாயம்

Jesus Film Project®
A Cru Ministry